# பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள்

- பாலுறுப்பு உண்ணிகள்.
- பெண்களின் அடிவயிற்றில் வலி ஏற்படல்.

## நோய்க்குணங்குறிகள் காணப்பட்டால் செய்ய வேண்டியவை.

- இயன்றளவு விரைவாக அருகில் உள்ள, பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் கிளினிக்கில் அல்லது அருகே உள்ள வைத்தியசாலை, வைத்தியரொருவரிடம் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- நோய்க்குணங்குறிகள் வெளித்தெரியா விட்டாலும் வைத்தியரின் ஆலோசனை குறித்த காலம்வரை சிகிச்சை பெறுங்கள்.
- மீண்டும் சோதிப்பதற்காக கிளினிக்குக்கு வரும்படி அறிவிக்கப்பட்ட தினத்தில் தவறாது கிளினிக்குச் சென்று, உரிய சோதனைகளுக்கு உள்ளாகி, நோய் பூரணமாகக் குணமாகி உள்ளது என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.
- பாலியல் துணைவரை/ துணைவியை கிளினிக்குக்கு வழிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும் போது அவ்வாறு வழிப்படுத்துங்கள்.

**உரிய வகையில் சிகிச்சை பெறுவதன் மூலம் சில நோய்களை வெற்றிகரமாக குணப்படுத்தலாம். உதாரணம்: கோனோறியா. சிபிலிசு. கிளமிடியா தொற்றுக்கள்.**

## இந்த நோய்கள் பரவும் ஆபத்தை ஏற்படுத்தும் பாலியல் நடத்தைகள்

- ❖ பலருடன் பாலியல் தொடர்புகளை வைத்திருத்தல்.
- ❖ தமது பாலியல் துணைவரை/ துணைவியை அடிக்கடி மாற்றிக் கொள்ளல்.
- ❖ அறிமுகமற்றோருடன் பாலியல் தொடர்பு கொள்ளல்.
- ❖ குடிபோதையில் இருக்கையில் பாலியல் தொடர்பு கொள்ளல்.
- ❖ பாலியல் சேவையில் ஈடுபடல்.
- ❖ பாலியல் சேவையில் ஈடுபடுவோருடன் பாலியல் தொடர்பு கொள்ளல்.

## நோய்க் குணங்குறிகள்

- ❖ பாலுறுப்புக்களில் புண்கள் ஏற்படல், கொப்புளங்கள் தோன்றல்.
- ❖ சிறுநீர் அழற்சி.
- ❖ ஆணின் சிறுநீர் வழியினூடாக சீழ் வெண்ணிறத் திரவம் வெளியேறல்.
- ❖ யோனி மடலினூடாக அதகி அளவில் பாயம் வெளியேறல்.

## பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள்

- பாலியல் தொடர்பின் போது தொற்றடைந்த ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும் நோய்கள்.

- தொற்றடைந்த ஒருவருடன் யோனிவழி, குதவழி, வாய்வழி பாலியல் தொடர்பு கொள்வதால் இந்நோய்கள் பரவ இடமுண்டு.

## இந்த நோய்களால் ஏற்படும் பாதிப்புக்கள்.

- உரிய சிகிச்சை பெறாவிட்டால் இந் நோய்கள் காரணமாக சிக்கல் நிலமைகள் ஏற்படலாம்.
    - ஆண், பெண் மலட்டுத்தன்மை
    - இதயம், மூளை, நரம்பு ஆகியவற்றில் தாக்கம்

- சில நோய்களில் நோய்க்குணங்குறிகள் மீண்டும், மீண்டும் தோன்றும்.

- சில நோய்க்கிருமிகள் கர்ப்பகாலத்தில் தாயிடமிருந்து குழந்தைக்கு கடத்தப்படும்.

- சில நோய்க்கிருமிகள் பிரசவத்தின் போது தாயிடமிருந்து குழந்தைக்கு கடத்தப்படும்

**பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் எல்லாவற்றையும் இரத்த சோதனை மூலம் மாத்திரம் இனங்கண்டு விட முடியாது; வெவ்வேறு நோய்களை இனங்காண்பதற்காக, வெவ்வேறு மாதிரிகளை சோதித்தல் வேண்டும்.**

## தவிர்த்திருத்தல்

❖ பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்களில் (சமூக நோய்களில்) இருந்து தவிர்த் திருத்தல் வேண்டும்.

- நம்பிக்கையான ஒருவருடன் மாத்திரம் பாலியல் தொடர்புகளை வைத்திருத்தல்.

- எதிர்பாராத வகையில் சந்திப்போருடனும்; அறிமுகமற்றோருடனும் ஒன்றுக்கு மேற்பட் டோருடன் பாலியல் தொடர்பு கொள்வதை தவிர்த்தல்.

- ஒன்றுக்கு மேற்பட்டோருடன் பாலியல் தொடர்புகளில் ஈடுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரியான வகையில் பாதுகாப்பு ஆணுறை (கொண்டம்) ஒன்றை அணிதல்.

**பாலியல் மூலம் நடத்தப்படும் நோய்க்கான கிளினிக் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது:**

| |
|---|
| **அறை இலக்கம் 33,<br>போதனா வைத்தியசாலை,<br>யாழ்ப்பாணம்.** |

**இங்கு நீங்கள் கூறும் தகவல்கள் இரகசியமாக பேணப்படும்**

**தயாரிப்பு உதவி:**

**செல்வி து. பாலேந்திரன்**

4ம் வருட மாணவி,

மருத்துவ பீடம்,

யாழ் பல்கலைக்கழகம்.

தயா அச்சகம் யாழ்ப்பாணம்.